## நமது கிராமங்கள்

# செம்மங்குடி

### செம்மங்குடி ராமதுரை

1960–ம் ஆண்டு என்று நினைக்கிறேன் ஆந்திர மாநிலத்தில் ஜன சஞ்சாரமே இல்லாத மலைகள் அடர்ந்த காடு. அதன் அடிவாரத்தில் ஆர்ப்பரித்து ஓடும் கிருஷ்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டு வரும் நாகார்ஜுன சாகர் அணைக்கட்டில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். என்மேல் பாசம் கொண்ட என்னுடைய மேலதிகாரி என் பூர்வோத்திரங்களை பற்றி விசாரிக்கும் போது என்னுடைய சொந்த ஊர் தமிழ்நாட்டிலுள்ள செம்மங்குடி என்ற ஒரு குக்கிராமம் என்று சொன்னவுடன், அவர் முகம் பிரகாசமாகி 'ராமபிரான் மீது ஒரு கீர்த்தனம் பாடு' என்று கூறினார். எனக்கு பாட வராது என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவர் நம்ப மறுத்து விட்டார். 'கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவிபாடும்' என்ற கூற்று எனக்கு அப்போது ஞாபகம் வந்தது.

இதை இங்கு ஏன் எழுதுகிறேன் என்றால் சங்கீத பிதாமகர் செம்மங்குடி ஸ்ரீ சீனிவாசய்யர் இந்த கிராமத்தை உலகின் மூலை முடுக்கெல்லாம் தன் கர்நாடக சங்கீதத்தின் மூலம் எப்படி பிரபலப்படுத்தியிருக்கிறார் என்பதை தெரியப்படுத்தத்தான்.

இயற்கை எழில் சூழ்ந்த சோழ சூடாமணி (குடமுருட்டி) ஆற்றின் வடகரையில் கும்பகோணம் திருவாரூர் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திலிருந்து 28 கிலோமீட்டர் மற்றும் திருவாரூரிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது செம்மங்குடி கிராமம்.

### செம்மங்குடி எப்போது வாத்திம கிராமமானது ?

இன்றைய காலகட்டத்திலிருந்து சுமார் 300 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சகஸ்ரநாம அய்யர் என்ற ஒரு பெரியவர் பிழைப்பைத் தேடி செம்மங்குடி வந்திருக்கிறார். இந்த சகஸ்ரநாம அய்யர் வடக்கே மத்தியப் பிரதேசத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு இடம் பெயர்ந்து வந்த 'தாரகாயண' கோத்திரத்தை சேர்ந்த ஓர் குடும்பத்தின் நான்காவது (4) தலை முறையை சேர்ந்தவர் என்று இந்த கிராமத்தில் பராமரிக்க பட்டு வரும் தலைமுறை ஓலை சுவடியின் (தற்போது நோட்டு புத்தகத்தில்

மறு பதிவு செய்யப்பட்டுள்ளது) குறிப்பில் இருந்து தெரிகின்றது.

இந்த சகஸ்ரநாம அய்யருக்கு 7 பிள்ளைகள். அந்த 7 பிள்ளைகளின், பிள்ளைகள், பேரன்கள், கொள்ளுப் பேரன்கள் என்று 10 தலைமுறையை சேர்ந்த வம்சாவளியின் பெயர்கள் இந்த ஓலை சுவடியில் காணப்படுகின்றன. இந்த சகஸ்ரநாம அய்யரின் முந்திய மூன்று தலை முறையினர், ஆனந்ததாண்டவபுரம் குப்பனாத்து கிருஷ்ணய்யர், மேலும் விஷ்ணுபுரம் மணி அய்யராத்து சாமாவய்யர் வகையறா என்று இந்த ஓலை சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த மூன்று தலைமுறையை சேர்ந்த வம்சாவளியினர் பெயர்கள் இதில் இடம் பெறவில்லை.

செம்மங்குடியை வாத்திம கிராமமாக மாற்றிய பெருமை இந்த சகஸ்ரநாம அய்யரே சேரும். மேலும் பல்வேறு காலகட்டங்களில் பல குடும்பங்கள் அரசவனங்காடு, புலியூர், சேங்காலிபுரம், பெருவழந்தான்பாலையூர், தூத்துக்குடி போன்ற கிராமங்களுக்கு இடம் பெயர்ந்த விபரமும் இந்த ஓலை சுவடியில் காணப்படுகிறது.

### வாத்திமாளுக்கு முன்பு இங்கு யார் இருந்தார்கள் ?

சகஸ்ரநாம அய்யர் வருவதற்கு முன்பு செம்மங்குடியில் 'பண்டுதாள்' என்று பேச்சுவழக்கில் கூறப்படும் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த பிராமண குடும்பத்தை சேர்ந்தவர்கள் வசித்து வந்தனர் என்பது செவி வழிவந்த செய்தி. இவர்களில் காஞ்சி காமகோடி பீடாதிபதி மகா பெரியவாளின் பூர்வாச்ரம மூதாதையர்களும் இருந்தனர். இதற்கான ஆதாரத்தை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

மகா பெரியவாளின் பூர்வாச்ரமத்து குடும்பம் ஒன்றில் கஷ்டநஷ்டங்கள் தொடர்ந்து ஏற்பட்டு அதற்கு பரிகாரம் தேடி அவர்கள் பெரியவாளை அணுகிய போது உங்கள் குலதெய்வம் செம்மங்குடி என்ற கிராமத்தில் இருக்கும் கரும்பாயிரம் சுவாமிக்கு கரும்பினால் பந்தல் போட்டு ஆராதனை செய்ய கஷ்டங்கள் தீரும் என்று கூறி இங்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த அன்பர் கூறிய செய்தி தான் இந்த ஆதாரம். மேலும் “ராயர் கிட்டாங்கி” என்ற ஒரு வீடும் இன்னும் செம்மங்குடியில் உள்ளது.

## சகஸ்ரநாம அய்யாின் வம்சத்தில் வந்த சில பிரபலங்கள்

'சங்கீத தாத்தா' என்று மகா பெரியவாளால் கௌரவிக்கப்பட்ட செம்மங்குடி சீனிவாசய்யர், வயலின் மேதை செம்மங்குடி பிடில் நாராயணசாமி அய்யர், (இவர் என்னுடைய ஒன்று விட்ட தாத்தா) அவர் குமாரர் பிடில் கல்யாண சுந்தரமய்யர், பிச்சு என்று செல்லமாக அழைக்கப்படும் ப்தமபூஷணம் P.S. நாராயணசாமி, பிரபல ஓவியர் 'சில்பி', டாக்டர் ஸரஸா, அக்கௌன்டன்ட் ஜெனரல் ராமய்யா, பிரபல எழுத்தாளர், 'மௌனி' முதலியோர்கள்.

## செம்மங்குடியில் கோவில்கள்

கிராமங்களிலே எப்படி செம்மங்குடி பிரபலமானதோ, அப்படியே இங்குள்ள கோவில்களும் தனிசிறப்பு வாய்ந்தவைகள். அவை என்னவென்று பார்ப்போம்.

### ( 1 ) வரதராஜபெருமாள் கோவில்

சுமார் 40 வீடுகள் கொண்ட சிறிய அக்ரஹாரத்தின் மேற்கு கோடியில் தெருவை பார்க்க அமைந்துள்ளது வரதராஜ பெருமாள் கோவில். இங்கு வருடத்தில் சுமார் 7 நாட்கள் அதாவது மார்ச் மாதம் கடைசியில், கிழக்கில் உதிக்கும் சூரியனின் ஒளிக்கதிர்கள், பெருமாள் கோவிலின், கோபுர வாசல், வெளிமண்டபம், மஹா மண்டபம், அர்த்த மண்டபம் முதலியவற்றை கடந்து கர்ப்பக்கிரஹத்தில் உள்ள பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவியின் பாதத்தில் இருந்து சிரஸ் வரை பரிபூர்ணமாய் அபிஷேகம் செய்து பூஜை செய்வது கண் கொள்ளா காட்சியாகும். இந்த சூரிய பூஜை சுமார் 10 நிமிடங்கள் நீடிக்கும். இப்படி சூரிய பூஜை செய்யும் கோவில்கள் நம் பாரத பூமியில் ரொம்பவும் அரிது.

### ( 2 ) சிவன்கோவில்

சுவாமியின் பெயர் அகஸ்தீஸ்வரர். அம்பாள் ஆனந்தவல்லி மிகவும் சக்தி வாய்ந்தவள். மகா மேரு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள கோவில்கள் பாரத பூமியில் பார்ப்பது அபூர்வம். அப்படி மேரு பிரதிஷ்டை ஸ்தலங்களில் செம்மங்குடி ஒன்று என்பது மிகப்பெரிய சிறப்பு அம்சமாகும். இதற்கு ஆகமவிதிகள்படி தினசரி பூஜைகள் நடைபெற்று வருகிறது. ஓவ்வொரு பௌர்ணமி அன்றும் இரவு நவாவர்ண

க்ரிதிகள் பாடப்பெற்று நவாவர்ண பூஜை சிறப்பாக நடைபெறுகின்றது. அப்போது அம்பாளுடைய சக்தி பல மடங்கு பெருகி, காண்போர் மனோரதங்கள் பூர்த்தியாவது கண்கூடாக எல்லோராலும் உணரப்பட்ட சத்யமாகும். இப்பூஜையை காண்பதற்கு பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் வந்து பயனடைந்து செல்கின்றனர். இப்படி பயனடைந்த பல குடும்பங்கள் சென்னையில் ஆனந்தவல்லி கைங்கரிய சபா என்ற ஒரு ட்ரஸ்டை ஏற்படுத்தி, ஒவ்வொரு வருடமும், மேரு பிரதிஷ்டை செய்த தினத்தில் செம்மங்குடியில் கூடி மூன்று தினங்கள் திருவிழாவாக கொண்டாடுகிறார்கள். அப்போது அன்னதானம், 16 கன்யா பூஜை, சுகாசினி பூஜை. கோ பூஜை, கனு பூஜை, அஸ்வத்த பூஜை, யாகசாலை ஹோமங்கள், இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், கல்யாண உத்ஸவம் முதலியவைகளை பல லக்ஷம் ரூபாய் செலவு செய்து கொண்டாடுவது கோலாகலமாகயிருக்கும்.

## ( 3 ) மகா மாரியம்மன் கோவில்:

எங்கள் ஊர் மாரியம்மன் அபார சக்தி படைத்தவள். செம்மங்குடி மட்டுமல்லாது பல வெளியூரில் வாழும் குடும்பங்களுக்கும் குல தெய்வமாக விளங்கும் என்று நான் சொன்னால் ஏதோ எங்கள் ஊரை பற்றி நான் பீத்திக் கொள்வதாக நீங்கள் நினைக்கலாம். இதையே மகா பெரியவாள் சொன்னால் ஆச்சரிய மட்டுமல்லாது முழு நம்பிக்கையும், பக்தியும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. அது என்னவென்று பார்ப்போம்.

மகாபெரியவா பல முறை செம்மங்குடிக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அப்படி ஒரு முறை 1939–ல் இங்கு வந்த போது அவருக்கு வைசூரி போட்டி அஞ்ஞாதவாசம் (யாருக்கும் பல நாட்கள் தரிசனமே கொடுக்காமல்) செய்துள்ளார்கள். இது பற்றி எங்கள் ஊர் அட்வகேட் வாஞ்சினாதய்யர் (நமது சமாஜ மெம்பர் சங்கர் அவர்களின் தகப்பனார்) அவர்களிடம் நான் பேசிக் கொண்டிருந்த போது, அவர் சொன்ன செய்தியை இங்கு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

ஒரு முறை அவர் பெரியவாளை தரிசனம் செய்ய காஞ்சிபுரம் சென்றுள்ளார். அப்போது மகா பெரியவர் "எனக்கு இந்த இரண்டு கண்களையும், கொடுத்தது யார்

என்று நோக்கு தெரியுமா?" என்று கேட்க "தெரியாது" என்று அவர் கூற பெரியவா தொடர்ந்து "செம்மங்குடியில் இருக்கும் மகமாயிதான். எனக்கு நீ ஒன்னு செய்வாயா? உடனே ஊருக்கு போய் அம்பாளுக்கு அர்ச்சனை பண்ணி எனக்கு பிரசாதம் கொண்டு தருவியா" என்று கேட்டிருக்கிறார்.

வரஹுர் பெரியவா

செம்மங்குடி கிராமத்திற்கும் மஹா பெரியவாளுக்கும் உள்ள மற்றும் ஒரு தொடர்பை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஒரு சன்யாசி எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய ஒரு சில யதீஸ்வரர்களில் 'வரகூர் பெரியவர்' ஒருவர் என்று மஹா பெரியவாளால் போற்றப்பட்டவர் எங்கள் ஊரில் 30 வருட காலம் வாழ்ந்திருந்தார். இவர் மஹா பெரியவாளுக்கு குருவாக இருந்தவர் என்றால் இவருடைய பெருமையையும், வித்வத்தையும் இங்கு குறிப்பிட தேவையில்லை.

எங்கள் ஊரில் 'தீட்டு' வந்தால் பிக்ஷை போட ஆள் இல்லாமல் பக்கத்து கிராமம் அசரவனங்காட்டுக்கு செல்வது அவர் வழக்கம். ஒருமுறை அரசவனங்காட்டுக்கு சென்ற போது அங்கு சித்தியாகிவிட்டார். இப்பவும் அங்கு அவருக்கு குருபூஜை விமரிசையாக நடைபெற்று வருகிறது.

( 4 ) கரும்பாயிர ஸ்வாமி கோவில்:

ஒரு காலத்தில் கரும்பு வியாபாரி ஒருவன் எங்கள் ஊரில் குடி கொண்டிருக்கும் 'தர்ம சாஸ்தாவிற்கு' இலவசமாக ஒரு கரும்பு கொடுக்க மறுத்ததால் அவன் கொண்டு வந்த 1000 கரும்புகளும் சக்கையாக போய்விட்டதாம். அப்போதிலிருந்து இவரை 'கரும்பாயிரஸ்வாமி' என்று அழைக்கின்றார்கள்.

எங்கள் ஊர் செம்மங்குடி மட்டுமல்லாது மகாபெரியவாளின் பூர்வா ச்ரமத்து பல குடும்பங்களுக்கும் குலதெய்வமாய் விளங்குகிறார்.

கல்வி – அன்றும் இன்றும்

ஆரம்பகாலத்தில் கிராம பஞ்சாயத்தில் நடத்தப் பெற்ற ஐந்து வகுப்புகள் கொண்ட ஒரு 'ஆரம்பப் பள்ளி' **(Elementry School)** ஒரு சிறிய ஹாலில் இருந்து

வந்தது. தனித்தனி வகுப்பு அறைகள் கிடையாது. எல்லோரும் ஒன்றாக அமர்ந்து தான் படிக்க வேண்டும். கற்றுக் கொடுக்க ,இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே இருந்தனர். அதில் ஒருவர் 'பெரியசார்' என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட என் தந்தை கிருஷ்ணமூர்த்தி அய்யர் ஒருவர். அன்றைய காலக்கட்டத்தில் பள்ளிக்கூடம் எப்படி நடந்தது என்று நீங்களே கற்பனை பண்ணி பாருங்கள். மேலும் 5 வகுப்புகளுக்கு மேல் கல்வியை தொடர முடியாமல் ஏழை குடும்பங்கள் பிள்ளைகளின் படிப்பை அதோடு நிறுத்திவிட்டனர்.

இந்த அவல நிலையை முடிவுக்குகொண்டு வர என் தந்தை தன் நிரந்தர வேலையை விட்டு விலகி Risk எடுத்து எட்டாவது வரை படிக்கும் உயர்நிலை ஆரம்பப் பள்ளியை ஆரம்பித்து நடத்தினர். இட வசதி பண வசதி இல்லாமல் மாட்டு கொட்டைகளிலும் மரத்தடியிலும் அந்த பள்ளியை நடத்த அவர் பட்டபாடு இங்கு விவரிக்க இயலாது.

பின்பு எங்கள் ஊரில் பெரிய செல்வந்தரும் தர்மவானுமாகிய பண்ணை நடேசய்யர், (நமது அங்கத்தினர் V. சங்கரின் தாத்தா) செம்மங்குடி சீனுவாசய்யர் உதவியுடன் உயர்நிலை பள்ளி ஒன்றை ஸ்தாபிதம் செய்தார். இன்று அது ஆல்போல் வளர்ந்து மேல்நிலை பள்ளியாக உயர்ந்து செம்மங்குடியை சுற்றி பல கிராமங்களுக்கு கல்வித் தொண்டு செய்து வருகிறது.

## இன்றைய அவல நிலை

சீரும் சிறப்புமாக இருந்த இந்த செம்மங்குடி கிராமம் இப்போது பொலிவிழந்து காணப்படுகிறது. 70 வயதை கடந்த தாற்காலிகமாக வாழ்ந்து வரும் ஓரிரு குடும்பங்களை தவிர மற்ற எல்லா வாத்திம குடும்பங்களும் பல்வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்து விட்டனர். வீடுகளையும் குடியானவர்களுக்கு விற்று விட்டனர். அன்று 'பண்டு தாளுக்கு' நேர்ந்த கதி இன்று வாத்திமாளுக்கு நேர்ந்துள்ளது. காலசக்ரத்தில் வாத்திமாள் வாழ்ந்த காலம் சரித்திரத்தில் இடம் பெருமா? யோசிக்க வேண்டிய விஷயம் தான்.